# மீண்டும் ஒரு மதீனா

"எந்த சமுதாயம் தன்னை திருத்திக்கொள்ள விரும்பவில்லையோ அல்லாஹ் அந்த சமுதாயத்தை திருத்துவதில்லை -அல் குர்ஆன்" .

அன்பிற்குரிய ஈமானிய சகோதரர்களே ! அஸ்ஸலாமு அலைக்கும் (வரஹ்மத்)

## முன்னுரை

மீண்டும் ஓர்"மதீனா"என்ற தலைப்பு நமது ஊரான ஏர்வாடி இஸ்லாமிய மாண்பின் அடிப்படையில் மதீனாவை போன்று எவ்வாறு கட்டி எழுப்பப்படவேண்டும் என்பதை அடிப்படையாக கொண்டது. இஸ்லாமிய வாழ்வின் ஒரு அங்கமான பிரதேசமான மதீனாவை ஏர்வாடியுடன் ஒப்பு நோக்க இயலாது எனினும், இஸ்லாமிய எழுச்சிக்கு முந்தைய அன்றைய மதீனாவையும் இன்றைய ஏர்வாடியையும் ஒப்பு நோக்கி அணுக வேண்டிய கட்டாயத்தில் நாம் இன்று உள்ளோம். அன்றைய ஜாஹிலிய (அறியாமை) கால மதீனாவில் அரபு குல , கோத்திர பகைமை போல இன்று அறிவுடைய ஏர்வாடி அரபுகளுக்கு அமைப்பு மற்றும் அரசியல் சண்டை. அன்றைய ஜாஹிலிய கால ஒழுங்கீனங்களுக்கு சற்றும் சளைக்காத நவீன ஜாஹிலியத்துவம் நம் கண் முன்னே பரவி செழித்து வளர்ந்திருப்பதை கண்கூடாக கண்டு வருகிறோம். மாமன், மச்சான்களாக, அன்பு நண்பர்களாக உயிரோடு ஒட்டி இருந்தவர்களெல்லாம் ஐ.நா சபை தலைவருக்கு நிகரான ?? வார்டு தேர்தல்களின் போது, பொது எதிரியாகி போய் விட்டார்கள்.அன்று ஒற்றை மனிதராய், கலிமா என்ற ஒற்றை வார்த்தையில் மதீனாவை மாற்றிய மாமனிதரின் உம்மத்துகளாகிய நாம் இன்று பல வார்த்தை பேசியும் பலனில்லாது போனதால் வேதனையோடு விழி பிதுங்கி நிற்கிறோம். ஏன் ஏன் ?? இன்றைய உம்மத்துகளின் எல்லா பிரச்சனைகளுக்கு எவ்வாறு ஒரு தலைமை இல்லாதது காரணமாகி போனதோ, அதே போன்று நமது ஊரிலும் நமது சமுதாய மக்களை வழி நடத்தி செல்லுவதற்கு ஒரு தலைமை இல்லாது போனதுதான் காரணம் .

## தொகுப்புரை

ஒரு ஊரோ அல்லது ஒரு சமுதாயமோ முன்னேற வேண்டுமெனில் முதலில் அங்கே ஒரு தலைமை இருக்க வேண்டும். அந்த தலைமையின் அடிப்படையில் தான் சமூக மாற்றம் , சமூக வளர்ச்சி சாத்தியம். இது இஸ்லாம் நமக்கு திருமறையின் மூலமாகவும் , நமது வழி காட்டி அல்லாஹுடைய தூதர் மூலமாகவும் காட்டி தந்து விட்டது இக்கட்டுரை முழுதும் அதை அடிப்படையாக கொண்டே இன்ஷா அல்லாஹ் தொடரும். ஆனால் நமக்கு தலைமையை பற்றிய சிந்தனையே இல்லையே ஏன் ? நமது ஊர் மக்கள் தலைமைத்துவம் மற்றும் ஜமாஅத்-ன் அவசியம் பற்றி குரான் ஹதீஸில் வந்துள்ளதை உணராத வரையில் ஒற்றுமை , முன்னேற்றம் என்பதற்கு நமதூரில் சாத்தியமே இல்லை. தலைமைத்துவம் , ஜமாஅத் அது கட்டாய கடமை என்று சொல்லும் அளவு அல்லாஹுடைய தூதர் அவர்கள் அதிகமாகவே கூறி சென்றுள்ளார்கள்.

"பிரிவுள்ள காலங்களில் முஸ்லிம்களின் ஜமாத்தையும் அதனுடைய தலைவரையும் பற்றிப் பிடிப்பீராக" ……….புஹாரி,முஸ்லிம்

"யார் தனக்கென ஓர் தலைவர் இல்லாத நிலையில் மரணிக்கின்றாரோ நிச்சயமாக அவரது மரணம் ஜாஹிலிய்ய மரணமேயாகும்"………. முஸ்தத்ரக் ஹாகிம்

"தனது கழுத்தில் பைஅத்(உடன்படிக்கை) இல்லாத நிலையில் யார் மரணிக்கின்றாரோ நிச்சயமாக ஜாஹிலிய்ய மரணமேயாகும்"……… முஸ்லிம்

"யார் ஒரு சான் அளவேனும் முஸ்லிம்களின் ஜமாத்துக்கு மாறு செய்கின்றாரோ அவர் தனது கழுத்திலிருந்து இஸ்லாத்தின் வளையத்தை கலைந்தவராவர்"…….. முஸ்தத்ரக் ஹாகிம்

மேற்கண்ட கதீதுகளை சற்று ஆராய்ந்தால் போதும், ஒரு தலைமை இல்லாமல் ஆரோக்கியமான ஒரு சமூகம் ஏற்ப்படுவதர்க்கு வாய்ப்பே இல்லை என்பது விளங்கி விடும்.

<u>ஜமா அத்தை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள்.</u>

இன்று நமது சமூகம் சகிப்பு தன்மைக்கு சமாதி கட்டி விட்டதற்கு காரணம் இந்த தலைமையின்மை தான். ஆகவே, நமதூரில் மிகச்சிறந்த ஒரு இஸ்லாமிய தலைமை கட்டாயம் ஏற்பட்டாக வேண்டும் அல்லது ஏற்படுத்தியாக வேண்டும். இன்றைய இந்திய அரசியலில் நமக்கு மிச்சம் இருக்கும் ஒரே இஸ்லாமிய அதிகாரம் , ஒரே ஆதாரம் இந்த இஸ்லாமிய ஜமாஅத் என்னும் ஒருங்கிணைந்த கொள்கையும், திட்டமும் கொண்ட கட்டமைப்பு மட்டும் தான். எனவே, நமக்கு மிச்சம் இருக்கும் அந்த ஜமாஅத் என்னும் கட்டமைப்பை கொண்டே நமக்கான தலைமையை உருவாக்கி கொள்வதே ஏற்புடையதாக இருக்கும் என கருதுகிறேன் . முதலில் ஐக்கிய ஜமாஅத் என்ற தலைமை தனி தனி முஹ்மின்களால் எவ்வாறு முகமைபடுத்தப்பட வேண்டும் என்பதை பார்க்கலாம். இன்றைய ஜமாஅத் எவ்வாறு இருக்கிறது ? அதன் செயல்பாடுகள் எவ்வாறு ? அதன் உருவாக்கம் எங்கனம் ? அதன் அதிகாரம் என்ன ? ஒரு சமையல் மேஸ்திரிக்கு அவரின் எடு பிடிகள் மேல் உள்ள (யாரும் குற்றம் காணுவது என் நோக்கம் அல்ல ..உண்மை) அதிகாரம் கூட இன்றைய ஜமாத்திற்கு இல்லாமல் போனது ஏன் ? ஜமாஅத் தலைமையில் அங்கம் வகிக்கும் சூரா உறுப்பினர்களின் / பிரதி நிதிகளின் தேர்வு எவ்வாறு இருக்கிறது ? ஒரு பள்ளியை பரிபாலனம் செய்ய கூடியவரின் தகுதி / தேர்வு எவ்வாறு உள்ளது ?? குடும்ப புலன், செல்வம் , செல்வாக்குகளின் அடிப்படையில் மட்டுமே

தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கபடும் முஹல்லாஹ் பிரதி நிதிகளின் செயல் எவ்வாறு இருந்தது என்பதற்கு சமீபத்திய நிகழ்வுகளே மிக சிறந்த உதாரணம் . எந்த தகுதிகளின் அடிப்படையில் அவர்கள் உள்ளே வருகிறார்களோ அதை மட்டுமே முழுமையாக நிறைவேற்றுகிறார்கள் . கட்சிகளின் அடிப்படையில் / செல்வாக்கு அடிப்படையில் தேர்ந்து

எடுக்கபட்டால் அதை நிலை நிறுத்துவதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதை மட்டும் தான் ஜமாத்தில் நிறைவேற்றுகிறார்கள் . இதுவா ஜமாஅத் கட்டமைப்பு இதுவா இஸ்லாம் நமக்கு காட்டி தந்த இஸ்லாமிய தலைமை உருவாக்க மரபு ? இதை பேணுவதற்கா நாம் ? இஸ்லாம் காட்டி தராத ஒன்றை இஸ்லாமாக காட்டுவதற்கு நாம் வெக்கப்பட வேண்டும். ஒரு பள்ளி / முஹல்லா பிரதிநிதியாகிய முஸ்லிம் அல்லாஹுக்கு மட்டுமே கட்டுப்பட்டவராக இருக்க வேண்டும் . அல்லாஹுடைய சட்ட திட்டங்களுக்கு பயந்து அவனுடைய ஆட்சியை அவனுடைய ஆளுமையை , அவனுடைய மேலாண்மையை இங்கே நிலை நிறுத்தும் ஒரு இறை அடிமையால் மட்டும் ஒரு தலைமை கட்டி எழுப்பப்பட வேண்டும். அந்த மனிதரை நாம் எங்கே அடையாளம் காண்பது ? முதலில் அவ்வாறு சிறந்த தலைமையை உருவாக்கும் செயல் திட்டத்தில் உள்ள அனைவரும் ஒன்று கூட வேண்டும். "ஏர்வாடி ஒழுங்கு மற்றும் புனர் நிர்மாண பணி" - என்று பெயரில் ஒரு அமைப்பாக உருவாக வேண்டும். பின் அந்த குழுவின் முதல் செயல் திட்டத்தை தொழுகை பள்ளிகளில் இருந்து ஆரம்பிக்க வேண்டும் . சரியாக , சரியான நேரத்தில் தொழுகையை நிறைவேற்றும் சகோதரர்களை கண்டறிந்து அவர்களில் ஐவரை அவர்களின் சமுதாய ஆர்வம் , பங்களிப்பு , செயல் திறன் , மார்க்க சிந்தனை , மார்க்க அறிவு போன்றவற்றின் அடிப்படையில் (உருவாக்கி) வைத்து கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு முஹல்லா வாரியாக தேர்ந்து எடுக்கப்பட்ட ( 6 x 5 = 30 ) முஸ்லிம்கள் மட்டுமே ஒரு ஐக்கிய ஜமாஅத் தலைவரை தேர்ந்தெடுக்கும் உருவாக்கும் , வழி நடத்தும் சூரா பிரதி நிதிகளாக இருக்க வேண்டும். ஒரு வேளை கட்சி , அமைப்பு ஆகியவற்றின் பின்னணியில் இருந்து இதே தகுதிகளை உடைய சகோதரர்கள் வந்தால் அவர்கள் ஜமாஅத் / முஹல்லா பிரதி நிதிகளாக மட்டுமே செயல் பட அனுமதிக்க வலியுறுத்த வேண்டும். அவ்வாறு அவர்களின் மூலமே இஸ்லாம் கூறியுள்ள அமீருக்கான தகுதிகளின் அடிப்டையில் ஒரு ஐக்கிய ஜமா ஜமாஅத் தலைவர் தேர்ந்து எடுக்கப்பட்டு அவருக்கு ஊரின் உள்ள அனைத்து முஸ்லிம்களின் ஒருங்கிணைக்கப்பட்ட பிரதிநிதியாக அதிகார உச்ச வரம்புகள் நிர்ணயிக்கப்பட வேண்டும். அங்கே ஒரு சிறு கிலாபா இருப்பதாக கருதி கொண்டு நமது ஒட்டு மொத்த சமுதாயத்தின் செயல் திட்ட தலைவராக, வழி காட்டியாக அவரை நாம் அடையாளப்படுத்தப்படுத்த வேண்டும். இன்று நாம் அனைவரும் அடிக்கடி கேள்வி படும் கேள்வி ஒன்று, ஜமாஅத் என்ன கொம்பா ? நான் ஜமாத்தில் இல்லையப்பா ?? நான் ஏன் ஜமாத்திற்கு கட்டுப்பட வேண்டும். ஜமாஅத் நாம் ஏன் கட்டு பட வேண்டும் என்று ?? எதிர்பார்க்கிறது ?? இந் சகோதரர்களுக்கு ஜமாஅத் என்ற அங்கத்தில் அவர்கள் இல்லை என்றால் ஏற்ப்படும் விளைவுகளை கடுமையாக்க வேண்டும். அமெரிக்காவை கொஞ்சம் பாருங்கள் அமெரிக்காவிற்கு கட்டுப்படும் பிற நாடுகளுக்கு அவர்கள் மீது அன்பு இல்லை அமெரிக்காவுடன் அனுசரித்து போனால் என்ன என்ன அனுகூலங்கள் என்று அவர்கள் விவாதிப்பது

இல்லை. ஆனால் அவர்களுடன் அனுசரித்து போக வில்லை என்றால் என்ன என்ன இழப்புகள் , என்ன அபாயங்கள் உண்டாகும் என்பதை பிற நாடுகள் உணர்ந்தே வைத்துள்ளனர். அது போன்று தான் ஜமாஅத் என்ற கட்டமைப்பில் அடிப்படை உறுப்பினர் என்ற தகுதியை கூட யாரும் மறுத்திட வகையில்லாமல் அவர்களை ஜமாத்தில் ஒரு அங்கமாக பிணைத்திட வேண்டும் . ஊரில் 15 வயது நிரம்பிய ஆண், பெண் அனைவரும் தங்களை பற்றிய அனைத்து விபரங்களை ஜமாத்தில் பதிவு செய்து ஜமாஅத் மூலம் அடையாள எண் பெறப்பட/ கொடுக்கப்பட வேண்டும். அந்தஅடையாள எண்களின் மூலமே கல்வி - பள்ளிகளில் சேர்க்கை, திருமணம் முதல் மைய வாளியாக பள்ளிகளில்

நுழைவது வரை இந்த ஜமாஅத் உறுப்பினர் எண்ணை பயன் படுத்தியே எந்த அனுகூலத்தையும் பெற முடியும் என்ற வகையில் ஜமாத் ஒரு உறுதியான கோட்டையாக யாருக்கும் பார பட்சமில்லாமல் கட்டி எழுப்ப பட வேண்டும். ஜமாஅத்- ன் தெரு முகவர்களாக வார்டு உறுப்பினர்களும் , ஜமாத்தின் அரசு பிரதி நிதியாக பஞ்சாயத்து தலைவர் வரை அனைவரும் ஜமாத்தின் பிரதி நிதிகளாக போட்டி இன்றி ஜமா அத்தினால் நிறுத்தப்பட வேண்டும் .

இரண்டாவதாக அமைப்பு மற்றும் அரசியல் கட்சிகளின் ஆளுமையை அபரிமிதமான செல்வாக்கை அவர்களுக்கு ஒரு வரையறைகளை ஜமாஅத் விதிப்பதின் மூலம் கட்டு படுத்த வேண்டும் . ஊருக்கு வெளியே நமது மக்களின் பிரதி நிதியாக மட்டும் நமதூரின் அமைப்புகள் செயல்படும் வண்ணம் நமது இயக்க சகோதரர்களை ஜமாத் கட்டு படுத்த வேண்டும் . அடுத்து மார்க்க மேலாண்மை (Religious Mangement or Influence) என்ற என்ற போர்வையில் நமது குடும்பத்தினரை , நமது சகோதரர்களை கூட்டம் கூட்டமாக , குழு குழுக்களாக பிரித்து வைக்கும் இந்த விசயத்தில் ஜமாத் அதிக கவனத்துடனும் , எச்சரிக்கையுடனும் செயல் பட வேண்டும். ஒரு பெரிய அணை திடீரென்று உடைந்து நாம் ஒரே நேரத்தில் மூழ்கி விடுவோமோ அந்த அளவுக்கு அபாயகரமானது இவ்விரு விசயங்களும். “இஸ்லாத்துக்கு பேராபத்து வந்திருக்கிறது. யூதர்களாலும் கிறிஸ்தவர்களாலுமல்ல, எம்மத்தியில் இருக்கும் இஸ்லாமிய அமைப்புக்களாலும் அவர்கள் சார்ந்த அறிஞர்களாலும்தான் ” என்ற மௌலானா மௌதூதி அவர்களின் கருத்துகளை சிந்தித்து பாருங்கள். நாம் இஸ்லாத்தின் அடிப்படையில் கருத்து மாறுபாடு கொண்டு அதிலே திளைத்து மூழ்கி குறுகிய சிந்தனையுடன் சண்டையிட்டு கொண்டே இருப்பது நமது ஊரின் வளர்ச்சிக்கும் , நம் எதிர் கால சந்ததிகளின் ஒற்றுமைக்கும் சவால் விடும் பிரச்சனைகள். நமது காலத்திலேயே .இதற்கு நல்லதொரு முடிவு ஏற்படுத்த வேண்டும். இவ்வகையான விசயங்களிலே நாம் தீர்வுகளை ஏற்படுத்தி விட்டு . நமது மக்களின் அன்றாட செயல் பாடுகள் மற்றும் அடிப்படை விசயங்களை “அகீதா”என்ற இஸ்லாமிய அடிப்படை கொள்கையுடன் எவ்வாறு பிணைப்பது என்று முயற்சிகளில் ஈடு பட வேண்டும்.

திருமண வாழ்வு பிரச்னை முதல் சொத்து பிரச்சனைகள் வரை இஸ்லாமிய முறைகளிலே தீர்வுகள் காணப்பட வேண்டும். இஸ்லாம் அல்லாத சட்ட திட்டங்களையோ , தீர்வு மையங்களையோ முடிந்த வரை புறக்கணிக்கும் வகையில் ஒரு நீதி மட்டும் பரிபாலான சபையாக ஐக்கிய ஜமாஅத் திகழ வேண்டும்.

<u>சிறுவர்களுக்கு குர்ஆன் பயிற்றுவித்தல் , இளைய சமுதாயத்தின் ஒழுங்கீனம்</u>

நமது ஊரில் உள்ள மார்க்க கல்வி கூடங்களை ஒருங்கிணைந்த (இஸ்லாமிய அடிப்படை கொள்கை) “அஹ்லாஹ்” என்ற மார்க்க செயல் திட்டங்களின் அடிப்படையில் ஜமாத்தே நிர்வகிக்க வேண்டும் . அதன் மூலம் மார்க்க கல்வியை மேம்படுத்தி ஒழுக்க இஸ்லாமிய நெறிகளை போதிப்பதர்க்கு மதரசா மாணவர்களை தயார் படுத்தி விட முடியும். மேலும் அந்த மாணவர்களின் மூலமாக அவர்களை களப்பணிகளில் ஈடுபடுத்துவதின் மூலம் நமது பிற ( உலக) கல்வி பயிலும் மாணவர்களை இஸ்லாமிய நெறிகளை அறியும் படி செய்யலாம். எடுத்துகாட்டாக ஏர்வாடியின்

ஒவ்வாரு தெருக்களுக்கும் இரு மதரசா மாணவர்களை பொறுப்புதாரிகளாக நியமித்து மாதம் தோறும் “தஸ்கியா” மற்றும் “தர்பியா” என்னும் உளத்தூய்மை நல்லொழுக்க பயிற்சிகளில் பங்கு பெற செய்யலாம். அதே போன்று பெண் மதரசா மாணவிகளை கொண்டு மாணவிகளுக்கும் “தஸ்கியா” மற்றும் “தர்பியா” நடத்தலாம்.

**<u>பெண்களிடம் இஸ்லாமிய அறிவை வளர்த்தல்</u>**

நமது ஊரில் மற்றுமொரு பிரச்சினை அடிக்கடி விவாதிக்கபடுகிறது. பெண்கள் மற்றும் பெண் மாணவிகளின் காதல் மற்றும்  கள்ள உறவுகள். நாம் அவ்வாறு நிகழ்ந்து விட்ட நிகழ்வுகளை வேண்டுமட்டும் பேசி பேசி மாய்ந்து போகிறோமே தவிர அவ்வாறான நிகழ்வுகளை தடுத்து நிறுத்தும் செயல் பாடுகளை திட்டமிடுவது இல்லை. சீரியல்கள் வீடுதோறும் செய்யும் மூளை சலவையும், நடிகைகளின் பகட்டு ஆடை வேஷங்களும், பக்குவ படாத பாடல் வரிகளும் அவர்களையும், நமது மாணவிகளையும் காதல் மயக்கங்களிலேயே உலா வர வைக்கின்றன. ஜும்மாக்கள் தோறும் அரைத்த மாவையே அரைக்க வேண்டுமா ?? இஸ்லாம் தான் மார்க்கத்தின் மகத்துவத்தை ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு மக்களை கொண்டு வெளிச்சம் போட்டு காட்டி கொண்டே இருக்கிறது. உங்களுக்கு அன்னை ஆமினா அசில்மி தெரியும் தானே ? அல்லாஹ்வுடைய மார்க்கத்தை ஏற்றுகொண்ட ஒரு செயலுக்காக அவரை அவரது குடும்பம் தூக்கி எரிந்தது. அவர் அளவிலா அன்பை கொண்டிருந்த பெற்ற பிள்ளைகளை கூட பிரிந்து போனார்கள். அவர்கள் அல்லாஹ்வுடைய மார்க்கத்திற்காக சிறிதும் சமாதானம் செய்து கொள்ள வில்லை. கடைசியில் புற்று நோயால் வர்ணிக்க இயலாத வண்ணம்  வேதனைகளை அனுபவித்த போதிலும் கூட " இந்த நோயின் கடுமையிலயும் என் இறைவனின் அன்பினை பார்க்கிறேன்" என்று கூறிய மாண்பாளர். சகோதரி Dr. ஆபியாஅவர்களை தெரியும்தானே நான்கு வருடம் ஆப்கன் சிறைகளில் கொடூரமான பாலியல் சித்ரவதைகளை கடந்து அமெரிக்க நீதிமன்றத்தில் சதை நார்கள் எல்லாம் கிழிந்து, எலும்புகள் எல்லாம் பலகீனப்பட்ட  அரை மயக்க நிலையில் சக்கர நாற்காலியில் ஆஜர் படுத்தபடும் போது இஸ்லாம் கூறும் முஸ்லிம் பெண்களின் கண்ணியத்தை பறை சாற்றும் விதமாக அங்கு இருந்த சிறு துணியை எடுத்து தனது தலையை ஹிஜாப் செய்ய முயன்றாரே அந்த  சகோதரிகளை பற்றி நமது சகோதரிகளிடம் கூறுங்கள். இஸ்லாமிய வானில் விடி வெள்ளிகளாக திகழும் இந்த சகோதரிகளின் கண்ணியத்திற்கு சற்றும் சளைக்காதவர்கள் தான் நம்மூர் சகோதரிகளும், அவர்களையெல்லாம் நமதூர் மக்களுக்கும் பரிட்சியப்படுத்துடுங்கள். ஜும்மாக்களின் மூலமும் , பொது கூட்டங்களின் மூலமும், தெரு பிரச்சாரங்களின் மூலமும் அவர்களை அறிமுகப்படுத்துங்கள் அவர்களின் மூலம்  உண்மையான இஸ்லாத்தை அறிமுகப்படுத்துங்கள். பின் அவர்கள் வழி தவற மாட்டார்கள்.

**<u>பள்ளிக்கு தொழ வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்</u>**

பள்ளிகளுக்கு தொழ வருபவர்களின் எண்ணிக்கையை அதிகபடுத்துவதை விட தொழுகைக்கு வந்து கொண்டு இருப்பவர்களிடம் சற்று மாறுதல் தேவை என கருதுகிறேன். சஹீத் செய்யது குத்துப் அவர்கள் தங்கள் புத்தகமான மைல் கற்கள் என்ற நூலில் கூறி இருப்பதை சற்று சிந்தித்து பாருங்கள்.

ஒரு முஸ்லிம் எந்த நிலப்பகுதியோடும் குறிப்பிட்ட தேசியதோடும் கட்டுபட்டவன் அல்ல. ஆனால் நாம் மட்டும் ஏன் ஒரு தொளுகையாளிகளாக தேசிய வாதத்திற்கு பதில் முஹல்லா வாதம் பேசுகிறோம். முஹல்லா என்பது நமது குடி இருப்பு பகுதியை அடையாளபடுத்தும் ஒரு வார்த்தை மட்டுமே , அதை நாம் ஏன் உணர மறுக்கிறோம் . ஒரு முஹல்லா ஊரின் எந்த முஹல்லாவிற்கும் எந்த இடைவெளியையும் ஏற்படுத்த கூடாது. ஏற்படுத்த அனுமதிக்க கூடாது. அதற்க்கு தீர்வாக ஒரு வாரத்தின் குறிப்பிட்ட பள்ளி வாசலில் வழக்கமாக தொழ வரும் சகோதரர்கள் முஹல்லாவை கடந்து பிற பள்ளிகளில் தொழ பழக / பழக்க வேண்டும். எடுத்து காட்டாக மேலைவளவு பள்ளி வாசலில் வழக்கமாக இஷா தொழ வரும் சகோதர்கள் அனைவரும் ஒன்று திரண்டு இரண்டாவது தெரு பள்ளிவாசலில் தொழ வேண்டும். முஹல்லாக்களில் தனி மனித அதிகாரத்தை களையவும் மேலும் மேலும் முஹல்லா தடைகளை நம் கண்களுக்கு தெரியாமல் நீண்டு செல்லும் "எல்லை கட்டுப்பாடு கோட்டினை" துடைத்து எரிந்து இந்த பகுதி முஸ்லிம்கள் அந்த பகுதி முஸ்லிம் என்ற வார்த்தை பிரயோகத்தை அழித்து எங்கும் என்றும் சகோதரத்துவம் தழைக்க செய்ய வேண்டும். ஜும்மா தொழுகை முடிந்த பின் வீட்டின் இன்றைய அசைவ சமையலை மோப்பம் பிடித்து கொண்டே பள்ளியை விட்டு வெளியேறும் சகோதரர்களை தடுத்து நிறுத்துங்கள். இறுகிய மனத்துடன் பள்ளிக்கு வருபவர்களை இளகிய மனதுடன் வெளியே செல்ல செய்வது தான் தொழுகை பள்ளிகள் . ஒவ்வொரு ஜும்மா பள்ளிகளிலும் தொழுகை முடிந்த பின் இஸ்லாமிய பண்பின், இஸ்லாமிய சகோதரத்துவத்தின் உச்ச கட்ட மகத்துவமான முஸாபா செய்யும்படி , கை கொடுக்கும் படி , சலாம் கூறியபடி , நலம் விசாரித்து படி , புன்னகை பூத்தவர்களாக வெளியேறி செல்ல வாசிப்பு பலகைகளில் அறிவுறுத்துங்கள் பின்பு பாருங்கள். பள்ளிகளிளின் உண்மை தன்மைகளை உணர்த்துங்கள். பின் பள்ளி கள் தானாகவே முஸ்லிம்களை ஈர்த்துகொள்ளும் அந்த தன்மை எல்லா இறையில்லங்களுக்கும் உண்டு. இறை உணர்ந்த உள்ளங்களுக்கும் உண்டு .

__வரதட்சணை மற்றும் வட்டிகளைக் களைதல் . மது, டிவி, மற்றும் செல்போன் கேடுகள் தவிர்க்கும் வழிமுறைகள்__.

ஜக்காத் மற்றும் வட்டியில்லா கடன் முறையை பற்றி மேலும் அறிந்து கொள்ளும் விதமாக நண்பர் ஒருவருடன் வீ களத்தூர் என்ற ஊரின் அமீரக பிரதி நிதிகளை சில நாட்களுக்கு முன் சந்திக்க வேண்டி இருந்தது. அவர்கள் கூறிய முதல் தகவல் தமிழகத்திலேயே வரதட்சணை முற்றிலும் ஒழிக்க பட்ட முதல் ஊராக வீ களத்தூர் இருக்கிறது. காரணம், வரதட்சணை எந்த வகையிலும் வாங்கபட்டிருக்க கூடாது என்ற தீவிர விசாரணையின் முடிவிலேயே எங்கள் ஐக்கிய ஜமாஅத் அத்திருமணத்தை அங்கீகரிக்கிறது . பதிவு புத்தகமும் வழங்கபடுகிறது என தெரிவித்தார் . அது போல நாமும் அதே முடிவை பின்பற்றலாம் . மேலும் நமது ஊரில் தெரு முனை சீர் திருத்த பிரசாரங்களை தொடர்ச்சியாக பெண் குமர்களை கொண்டும் , வளரும் மாணவ, மாணவிகள் கொண்டும் நடத்தலாம் .மேலும் இளைஞர்களிடையே வரதட்சணை வாங்குவதால் அவர்களுக்கு

ஏற்படும் அவமானங்களை பிரத்தியோக துண்டு பிரசுரங்களின் மூலம் , இணைய தள e mail மூலம் , face book மூலம் பள்ளி கல்லூரிகள் இருந்து விளக்கி பிரசாரம் செய்யலாம்.
மற்றுமொரு பிற சமுதாயத்தினர் வசிக்கும் ஊரில் மதுக்கடைகளை எங்கள் ஊரில் நடத்த விட அனுமதிக்க மாட்டோம் என மக்கள் அம்மதுகடைகளின் முன்னால் அமர்ந்து தர்ணா செய்து , மத்திய மாநில அரசுகளுக்கு மனுக்கள் எழுதி தடை செய்ததை நாம் அனைவரும் அறிவோம் . மது கடைகளில் போய் நின்று கொண்டிருக்கும் நமது சமுதாய மக்களுக்காக நாம் மது கடைகளுக்கு முன்னால் போய் அமர வேண்டும் . மேலும் மாணவர்களிடையே நீக்கமற நிறைந்திருக்கும் மொபில் சீரழிவு கலாச்சாரத்தை தடுத்து நிறுத்த ஒரு அதிரடி முறை செய்யலாம் . ஏர்வாடி ஒழுங்கு மற்றும் புனரமைப்பு குழு உறுப்பினர்கள் அவ்வாறு சந்தேகத்திற்கு இடமான மாணவர்களின் மொபில்களை பறித்து ஆய்வு செய்யலாம். அவர்களின் பெற்றோருக்கு மற்றும் பள்ளி நிர்வாகத்திற்கும் தெரியபடுத்த வேண்டும் . மிகவும் சிக்கலான விசயமாக இது இருப்பதால் ஐக்கிய ஜமாஅத் , பள்ளிகளின் பெற்றோர் ஆசிரியர் கழகம் என சரியான புரிந்துணர்வின் அடிப்படையில் ஒழுக்கமான தலை முறையை வார்த்தெடுக்க பெற்றோர் - பள்ளி - ஒழுங்கு சபை - ஜமாஅத் ஆகியோர்களின் கூட்டு ஒப்பந்த உறவின் அடிப்படையில் இதை வெகு விரைவிலே அமுல்படுத்த வேண்டும் . அந்த அளவுக்கு நமதூரில் பார தூரமான நிலைமை தற்போது நிலவி வருகிறது . மேலும் செல் போன் நிறுவனங்களில் இருந்து வரும் ஆபாச , வழி தவறகூடிய குறுஞ்செய்தி , MMS, ஜோக் முதலியவற்றை அரசு நடவடிக்கை மூலம் , Specified Service Ban மூலம் கட்டுபடுத்தலாம் .

## <u>முடிவுரை</u>

கண்ணியத்திற்குரிய சகோதர்களே ! மேற்கூறிய அனைத்து விசயங்களிலும் ஈமான் என்ன செய்ய முடியும் என்ன செய்ய வேண்டும் என்ற பெரிய கேள்வி தொக்கி நிற்கின்றது. முதல் தலைப்பில் நான் கூறிய ஏர்வாடி ஒழுங்கு மற்றும் புனரமைப்பு சபை - ன் அனைத்து உறுப்பினர்களில் சரி பாதி சகோதரர்கள் நான் அடையாளம் கண்ட ஈமானின் ஈமானிய சகோதரர்கள் தாம் . சைத்தான் தாருல் கர்ப் என்னும் அநியாய பூமியை அமைக்கும் பணியில் ஓய்வில்லாது பணியாற்றி கொண்டு இருக்கிறான். அதில் குறிப்பிட தக்க வெற்றியும் நமது ஊரில் பெற்று இருக்கிறான். ஆனால் அல்லாஹ்வின் அடிமைகள் என்று கூறிகொள்ளும் நாம் அதற்கு எதிரான தாருல் இஸ்லாம் என்னும் இக்காமத்தை நிலை நாட்ட தவறியவர்களாக இந்த உல்லாச புரியின் உற்சாக வாலிபர்களாக வலம் வருகிறோம். நாம் இறந்து ஏர்வாடி மண்ணுக்கு உரமாவதை மறுக்க மறக்க முடியாது ? ! இருக்கும் நேரத்திலேயே நமது மண்ணுக்கு செயல்களால் உரம் இட்டால் என்ன ?? வரும் தலைமுறையாவது வசந்தத்தை வரவேர்க்கடுமே !
(இக்கட்டுரையின் அனைத்து சொந்த கருத்துகளும் எனது மார்க்கத்தை எனது பகுதியில் நிலை நாட்டும் ஒரு அவாவின் வெளிப்பாடுதான் . எனது எந்த சகோதரரையோ , சகோதர குழுமத்தையோ குறை கூறுவதோ , வருந்த செய்வதோ அல்ல ... என்னை அறியாமல் தவறுகள் இதில் இருப்பின் அதற்கு முழு பொறுப்பும் என்னை சார்ந்தது..அல்லாஹு அக்பர் லில்லாஹில் ஹம்து .. )